சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.K. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2026 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 29 ஆம் நாள்)

COMMERCIAL ORIGINAL SUIT No. 52/2025

CNR.No. TNCB190004152025

கனரா வங்கி, சிறுமுகை கிளை, அலுவலக முகவரி சத்தி ரோடு, மேட்டுப்பாளையம், வங்கிக்காக அதன் கிளை மேலாளர் ... வாதி

-இடையே-

விஸ்வநாதன், த/பெ. ராஜகோபால், வயது சுமார் 37, வசிப்பிட முகவரி கதவு எண். 39/16 சி, கம்பம் வீதி, சிறுமுகை, மேட்டுப்பாளையம் தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம் - 641 302. .... பிரதிவாதி

இந்த வழக்கானது MSME Loan-க்காக பிரதிவாதி வாதி வங்கிக்கு 10.09.2024 ம் தேதி முடிய ரூ.15,16,931/- கடன் பாக்கித் தொகைக்கு 11.65 சதவீதம் வருட வட்டியுடன் செலுத்த வேண்டியும் மேலும் வாதிவங்கிக்கு பிரதிவாதி செலவுத் தொகையுடன் கொடுக்க உத்தரவிடவேண்டுமாய் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் - 27.06.2025

வழக்குமூலம் ஏற்பட்ட நாள் - சிறுமுகை கிராமம், மேட்டுப்பாளையம் தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம் நீதிமன்ற ஆள்வரை எல்லைக்குட்பட்ட பகுதியில் 14.08.2023, 05.02.2024, ஆகிய தேதிகளிலும் அதன் பின்னிட்டும் ஏற்பட்டுள்ளது.

வழக்கு மதிப்பு விபரம் - நீதிமன்ற ஆள்வரை மற்றும் நீதிமன்ற கட்டணத்தின் பொருட்டு வழக்கு மதிப்பு ரூ .15,16,931.86/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்புச் சட்டம் பிரிவு 22-ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.45,508/- செலுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீட்டு விபரம்

Amount due and Claimed as per accounts

as on 10.09.2024 - Rs.15,16,931.86/-
Court fee paid under section 22 of Tamil Nadu
Court Fee and Suit Valuation Act - Rs.45,508/-

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு .ஏ.சச்சிதானந்தகுமார்,அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

**தீர்ப்பாணை**

1. வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதிக்கு பிரதிவாதி பாக்கி கடன்தொகை ரூ. .15,16,931.86/- மற்றும் ரூ.14,15,500/- ஐ-க்கு வழக்கு தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9 சதவீதம் வட்டியும் பின்னிட்டு தொகை வசூலாகும் நாள் வரை 6 சதவீதம் பின் வட்டியும் சேர்த்து கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. வாதிக்கு பிரதிவாதி வழக்கு செலவுத் தொகையாக ரூ.45,528/-ஐ கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

**செலவுத் தொகை பட்டியல்**

| வாதி தரப்பில் | | | பிரதிவாதி தரப்பில் |
|---|---|---|---|
| தாவாவிற்கு கட்டணம் | - | ரூ.45,508/- | --இல்லை - |
| வக்காலத்துக்கு கட்டணம் | - | ரூ. 20/- | |
| | | --------------------------------- | |
| மொத்தம் | - | ரூ,45,528/- | |
| | | ---------------------------- | |

2026 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 13 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,